2008 மே 6]

ஆட்சிக் காலத்திலே ஸ்ரீரங்கம் தெற்கு வாசலில் இராஜ கோபுரம் கட்டப்பட்டது. இப்பொழுது ஸ்ரீரங்கம் வடக்கு வாசலில் இராஜ கோபுரம் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

206—

உயர்நிலைப் பள்ளி

***7140—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்திடக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. கருத்துருக்கள் பெறப்பட்டால், விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும். தற்போது ஆரம்பப் பள்ளிகள் ஆரமபிக்கப்பட்டு, அவை முதலில் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, பின்னர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2008 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் பெண்களுக்கென்று ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி அமைத்திடக் கேட்டிருக்கிறேன். பண்ருட்டி தொகுதியிலே இருக்கிற, கிட்டத்தட்ட 3 இலட்சம் மக்களுடைய பெண் குழந்தைகள் படிப்பதற்கும், பண்ருட்டி வட்டத்திற்கு அருகில் இருக்கிற அருமை நண்பர் திரு. சபா. இராஜேந்திரன் அவர்களின் நெல்லிக்குப்பம் தொகுதியில் அடங்கியுள்ள நூற்றுக்கணக்கான கிராமத்தினுடைய பெண்கள் பண்ருட்டியில் வந்து படிப்பதற்கு ஏதுவாகவும், பண்ருட்டி நகரத்தில் பெண்களுக்கென உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த வேண்டும். அரசுக்குச் சொந்தமான வட்டாட்சியர் அலுவலகத்தில் 10 ஏக்கர் நிலமும் இருக்கிறது. இதுவரையிலும் பெண்களுக்கு என்று என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தினாலே, நகரப் பகுதியிலேயே ஓர் உயர்நிலைப் பள்ளியை அமைத்துக் கொடுத்தால் எதிர்கால பெண் தலைமுறையினுடைய கல்விக்கு வசதியாக, வாய்ப்பாக இருக்கும் என்பதால் வரும் ஆண்டுகளிலே பெண்களுக்கென்று ஓர் உயர்நிலைப் பள்ளியை அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறியவிரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை அமைப்பதிலே முக்கியத்துவம் கொடுக்கிறோம். எங்கேயாவது பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், பெண் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, பெண்கள் பள்ளிகளை முதலிலே அமைப்பதற்கு மிகுந்த முக்கியத்துவமும், முன்னுரிமையும் அளிக்கிறது. ஆனால், அதை எப்படிக் கொடுக்கிறோம் என்று சொன்னால், இப்போது நடைமுறையிலே, ஏற்கெனவே இருக்கக்கூடிய ஒரு

2008 மே 6]

பள்ளியிலேயிருந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பிரித்து, அங்கே அதிகமான பெண் குழந்தைகள் படிக்கிறார்கள் என்று சொன்னால், பெண்களுக்காக தனியாக ஒரு பள்ளியை பிரித்து அமைக்க முடியும். பெண்களுக்காக நேரடியாக ஒரு பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது என்பது இப்போது நடைமுறையிலே இல்லை. இந்தக் குறிப்பிட்ட பள்ளியைப் பொறுத்தமட்டிலே, அங்கேயிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே, பண்ருட்டி அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. இந்தப் பள்ளியிலே 15 பெண் குழந்தைகள்தான் இப்போது 9 ஆம் வகுப்புக்குப் போவதாக இருக்கிறார்கள். பதினைந்தே குழந்தைகள். எனவே, இந்தப் பள்ளியைப் பொறுத்தமட்டில், உடனடியாக பெண்கள் பள்ளியாக ஆக்குவதற்கான வாய்ப்புகள் குறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி நகரத்தைப் பொறுத்த அளவிலே, கிட்டத்தட்ட 60 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரம் பொதுமக்கள் வாழ்கிறார்கள். அங்கு 10-க்கும் மேற்பட்ட தனியார், அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பிள்ளைகள் படிக்கின்றார்கள். தனியார், அரசு மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் கிட்டத்தட்ட 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் படிக்கிறார்கள். குறிப்பாக அங்கு, முத்தையா செட்டியார் அரசு உதவி பெறும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு மட்டும் 4 ஆயிரம் பெண்கள் படிக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் பெண்களை அங்கு சேர்க்கின்றபோது எங்கள் பள்ளியில் இடம் இல்லை, அதனால் சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று அந்தப் பள்ளிகளின் நிருவாகம் மறுதலிக்கிறது. மீதியிருக்கிற தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றால் அங்கு கட்டணம் என்ற பெயரிலே அதிகமான தொகையை வசூல் செய்கின்ற காரணத்தினாலே, பண்ருட்டி நகரத்தில் பெண்களுக்கென்று கல்விக்கூடம் இல்லாத காரணத்தினாலே, பண்ருட்டி அரசு மேல்நிலைப் பள்ளியிலே வெறும் 15 மாணவிகள் படிக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்வது உண்மை. அது முழுக்க முழுக்க ஆண்கள் பள்ளி. அந்த ஆண்கள் பள்ளியிலே சிறப்பு நேர்வாகத்தான் அமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். அதனால்தான் அங்கு 15 மாணவிகள் படிக்கின்றார்கள். பக்கத்தில்

திருவையூரில் ஓர் அரசு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அதையேகூட அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி, வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 12 ஏக்கர் அரசு இடம் காலியாகக் கிடக்கின்ற காரணத்தினாலே அங்கு எதிர்வரும் காலத்தில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை எதிர்காலத்திலே அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

207—

மலைப் பாதை

***33519—திரு. தி. இராமசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் முதல் தேனி வரை ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு மற்றும் வருசநாடு வழியாக மலைப் பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருதுநகர் மாவட்டத்தில் பிளவக்கல் அணை, நமது